உ

கடவுள்துணை.

மண்டலபுருடோத்தமன்

அருளிச்செய்த

# சூடாமணிநிகண்டில்

பதினோராவதாகிய

## ஒருசொற்பலபொருட்டொகுதி

மூலமும் உரையும்,

௨-ம் பதிப்பு.

---

புதுவை

சு. மாணிக்க உபாத்தியாயரவர்களால்

பலபிரதிருபங்களைக்கொண்டு

பரிசோதிப்பித்து,

சென்னபட்டணம்:

ஊ-புஷ்பரதசெட்டியாரவர்களால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1889.

உ

கடவுள் துணை.

# பதினேராவதுநிகண்டு

என்கிற

# ஒருசொற்பலபொருட்டொகுதி.

## காப்பு.

முடிவிலின் பத்து மூவா முதல்வனைப் போற்றி செய்தே
யடிதொறு மிரண்டு மொன்று மாதியிற் பொருளடக்கி
நடைபெறு ககர மாதி னகரவீ றெதுகை யாகப்
படியிலோர் சொற்பொ ருட்பல் விதத்தொகை பகரலுற்றும்.

## பதப்பொருள்.

| | |
|---|---|
| முடிவில் | அளவில்லாத |
| [பத்]து | இன்பத்தையுடைய |
| மூவா | கெடாத |
| முதல்வனை | அருகக்கடவுளை |
| போற்றிசெய்[து] | துதிசெய்து |
| அடிதொறும் | அடிகடோறும் |
| இரண்டும் | இரண்டுசொல்லினும் |
| ஒன்றும் | ஒருசொல்லினும் |
| ஆதியில் | முதலில் |
| பொருள் | பொருள்களை |
| அடக்கி | அமைத்து |
| நடைபெறு | நடைபெற்றுவரும் |
| ககரமாதி | ககரவெதுகைமுதல் |
| னகரவீறெதுகையாக | னகரவெதுகை யிறுதியாக |
| படியில் | இவ்வுலகின்கண் |
| ஓர் சொற்பொருட் பல் விதத்தொகை | ஒருசொற் பலவகைப் பொருட்டொகுதியை |
| பகரலுற்றும் | சொல்லலுற்றும், என்றவாறு. |

## க - வது. ககரவெதுகை.

| விருத்தம். 1—க. | | இதன்பொருள். க. |
|---|---|---|
| பகவனேயீசன்மாயோன் | பகவன் | சிவன் - திருமால் - பிரமன் - |
| பங்கயன்சினனேபுத்தன், | | அருகன் - புத்தன் (ரு) |
| பகலோாளொருமுகூர்த்தம் | பகல் | நாள் - ஒருமுகூர்த்தகாலம் - |
| பகலவனடுவேதேசு, | | சூரியன் - நடு - பிரகாசம் (ரு) |

| | | |
|---|---|---|
| மகரமேசுறுப்பூந்தாதாம் | மகரம் | சுறா - பூந்தாது (உ) |
| வசிகூர்மைவசியம்வாளே, | வசி | கூர்மை - கைவசம் - வாள் (ங) |
| அகமனமனையேபாவ மகலிடமுள்ளுமாமே. | அகம் | மனம் - வீடு - பாவம் - இடம் - உள் (ரு) |
| 2—உ. | | உ. |
| சிகரிகோபுரமேவெற்புச் சிறெலிநாணாநற்பேர், | சிகரி | கோபுரம் - மலை - எலி - நாணா (ச) |
| சிகழிகைமயிர்முடிப்பேர் சிறந்தவாசிகைதேமாலை, | சிகழிகை | மயிர்முடி - கோத்தமாலை - பூமாலை (ங) |
| சிகரமேமலையினுச்சி திரைசென்னிதிவலைவெற்பாம், | சிகரம் | மலையினுச்சி - அலை - தலை - துளி - மலை (ரு) |
| மகம்யாகமோர்நாளென்ப | மகம் | யாகம் - ஓர்நட்சத்திரம் (உ) |
| மாய்வென்பமறைவுஞ்சாவும். | மாய்வு | மறைவு - சாவு (உ) |
| 3—ங. | | ங. |
| இகல்பகைவலிபோர்முப்பேர் | இகல் | பகை - வலிமை - யுத்தம் (ங) |
| இகுளையேதோழிநட்பாம், | இகுளை | தோழி - சிநேகம் (உ) |
| புகரென்ப மழைக்கோள்குற்றம் புற்கெனு நிறமுமுப்பேர், | புகர் | சுக்கிரன்-குற்றம்-கபிலநிறம் (ங) |
| நகமலையுகிர்மரப்பேர் | நகம் | மலை - நகம் - மரம் (ங) |
| நகைமகிழ்வொளிசிரிப்பாம், | நகை | மகிழ்ச்[illegible] - பிரகா[illegible] - சிரிப்பு (ங) |
| ககனம்விண்படைகாடென்ப | ககனம் | ஆகாயம் - சே[illegible] - காடு (ங) |
| கடவுடேமுனிநன்மைப்பேர். | கடவுள் | தெய்வம் - முனிவன்-நன்மை (ங) |
| 4—ச. | | ச. |
| சாகஞ்சாகினிவெள்ளாடு தேக்கெனுந்தருவேதேனீ, | சாகம் | [illegible]றுகீரை - வெள்ளாடு - தே[illegible]மரம் - தேனீ (ச) |
| பாகலேகாரவல்லி பலாவென்றும்பகரலாமே, | பாகல் | [illegible]கல் - பலாமரம் (உ) |
| யூகமேகருங்குரங்கோ டுட்பொருளுணர்தருக்கம், | யூகம் | [illegible]குரங்கு - அகப்பொரு[illegible]ணர்தல் - தருக்கம் (ங) |
| நாகம்விண்குரங்குபுன்னை நற்றூசுமலைபாம்பியானை. | நாகம் | [illegible]ம் - குரங்கு - புன்னை மரம் - நல்லாடை - மலை - பாம்பு - யானை (எ) |
| 5—ரு. | | ரு. |
| திகிரியேமூங்கில்வட்டத் தேருருளாழிவெற்பாம், | திகிரி | மூங்கில்-வட்டவடிவு-தேர்-தேருருளை - சக்கராயுதம்-மலை (சா) |
| சிகியென்பமஞ்ஞைதீயாந் தீதுறுகேதுவும்பேர், | சிகி | மயில் - நெருப்பு - கேதுவெனுமோர்கோள் (ங) |
| ஞெகிழியேசிலம்பினொடு நெருப்புறுகொள்ளிக்கும்பேர், | ஞெகிழி | சிலம்பு - நெருப்புறுவிறகு (உ) |
| எகினமேபுளிமாஞாளி கவரிமாநீர்நாயன்னம். | எகினம் | புளிமாமரம் - நாய் - கவரிமான் - நீர்நாய்-அன்னப்புள் (ரு) |
| 6—சா. | | சா. |
| ஆகுவேயெலியினொடு மாம்பெருச்சாளிக்கும்பேர், | ஆகு | எலி - பெருச்சாளி (உ) |
| யோகமேதியானங்கூட்ட முபாயமாமுயர்ச்சிக்கும்பேர், | யோகம் | தியானம் - கூட்[illegible] - உபாயம் - உயர்ச்சி (ச) |

| | | | |
|---|---|---|---|
| போகியிந்திரன்பாம்பென்ப | போகி | தேவேந்திரன் - பாம்பு | (உ) |
| போகில்புட்பொதுப்பூ[illegible]மாட்டா | போகில் | பறவைப்பொது - பூவரும்பு | (உ) |
| கோகி[illegible]ங்குயில்பல்லிப்பேர் [ம், | கோகிலம் | குயில் - பல்லி | (உ) |
| குடங்கரோகுடிசைகும்பம். | குடங்கர் | குடிசை - குடம் | (உ) |
| 7—எ. | | எ. | |
| பொகுட்டுத்தாமரைப்பூங் கொட்டை பொருப்புச்சேற் றெழுந்தகொப்புள், | பொகுட்டு | தாமரைக்கொட்டை - மலை - சேற்றிலெழுங்குமிழி | (ங) |
| இகுத்தலேல்செகுத்தல்வீழ்த்த லிரித்தலோடழைத்தலீதல், | இகுத்தல் | கொல்லுதல் - தள்ளுதல் - சாய்த்தல் - அழைத்தல் - கொடுத்தல் | (ரு) |
| புகைக்கிடுநாமம்தூமம் போற்றும்யோசனைக்கும்பேரே | புகை | புகை - யோசனைதூரம் | (உ) |
| அகைத்தல்வேதனையொடித்த லறுத்திடலுயர்த்தலாமே. | அகைத்தல் | வருத்தம் - முறித்தல் - அறுத்தல் - உயர்த்தல் | (ச) |
| 8—அ. | | அ. | |
| சிக்கமேகுடுமிநாமஞ் சீப்புடனுறியுமேற்கும், | சிக்கம் | குடுமி - சீப்பு - உறி | (ங) |
| கொக்குமாமரமேசெந்நாய் குரண்டமே[illegible]லநாளாம், | கொக்கு | மாமரம் - செந்நாய் - கொக்கு - மூலநட்சத்திரம் | (ச) |
| வக்கிரங்கொடுமை[illegible]ீளன் மடங்குதலுடனே[illegible]வட்டம், | வக்கிரம் | கொடுமை - மீளுதல் - மடங்குதல் - வட்டம் | (ச) |
| சக்கிரிகுயவன்செக்கா[illegible] றரா பதிநெடுமால்பாம்[illegible] | சக்கிரி | குசவன் - செக்கான் - அரசன் - திருமால் - பாம்பு | (ரு) |
| 9—கூ. | | கூ. | |
| தூக்கென்பபாட்டுங்கூத்துந் துலாமுமாராய்தலும்பேர், | தூக்கு | செய்யுள் - கூத்து - நிறுபலம் - ஆராய்தல் | (ச) |
| பாக்கென்பதெதிர்காலத்தைப் பகரிடைச்சொற்றுவர்க்காய், | பாக்கு | எதிர்கால - விடைச்சொல் - பாக்கு | (உ) |
| மேக்குமேற்றிசைமேலும்பேர். | மேக்கு | மேற்றிசை - மேல் | (உ) |
| மெய்யுண்மையுடலுமாமே, | மெய் | நிசம் - சரீரம் | (உ) |
| ஊக்கமேவலியுற்சாக முள்ளத்தின் மிகுதிக்கும்பேர். | ஊக்கம் | வலிமை - உற்சாகம் - உள்ளக் கிளர்ச்சி | (ங) |
| 10—கo. | | கo. | |
| பகடிபம்பெருமையேறு பஃறியாண்மேதியைம்பேர், | பகடு | யானை - பெருமை - எருது - ஓடம் - எருமைக்கடா | (ரு) |
| தகடிலையம்மையென்ப | தகடு | இலை - அச்சவடிவு | (உ) |
| தபனனேயிரவிதீயாம், | தபனன் | சூரியன் - நெருப்பு | (உ) |
| அகடென்பநடுவேகுக்கி | அகடு | நடு - வயிறு | (உ) |
| அருளென்பகருணைசத்தி, | அருள் | கிருபை - சிவசத்தி | (உ) |
| மகரந்தங்கள்ளுந்தேனு மலர்த்தாதும்வழங்குமுப்பேர். | மகரந்தம் | கள் - தேன் - பூந்தாது | (ங) |
| 11—கக. | | கக. | |
| சகுந்தம்புட்பொதுநீள்பூகம் | சகுந்தம் | பறவைப்பொது [illegible] | |
| சடை[illegible]வேணிவேராம், | சடை | சடை - வேர் [illegible] | |

| | | |
|---|---|---|
| சிகண்டியேபாலையாழின் | சிகண்டி | பாலையாழின்றிறத்தோரிசை- |
| திறத்திசைமயிலலிப்பேர், [ன் | | மயில் - பேடி (௩) |
| சகுனிபுண் ணிமித்தம்பார்ப்போ | சகுனி | பறவை-சகுனம்பார்ப்பவன் (௨) |
| சமமென்பதமரொப்பாகும், | சமம் | யுத்தம் - உவமை (௨) |
| சகுனமேகிழங்குபுள்ளின் | சகுனம் | கிழங்கு - பறவைச்சாதி - |
| சாதியுநிமித்தமும்பேர். | | சகுனம் (௩) |
| 12—௧௨. | | ௧௨. |
| சக்கரம்பெருமையோர்புட் | சக்கரம் | பெருமை-ஓர்பறவை - பூமி - |
| டரணியேபிறப்புவட்ட, | | பிறப்பு - வட்டவடிவு - தே |
| மிக்கதேருருளையாழி | | ருருளை - கடல் - மலை (௮) |
| வரையெனவிளம்புமெண்பேர், | | |
| பக்கம்புட்சிறகுநட்புப் | பக்கம் | பறவையினிறகு-சிநேகம்-பிர |
| பகர்திதியருகுமாகும், | | தமை முதலியதிதி-பக்கம் (௪) |
| நக்கனேயருகன்சம்பு | நக்கன் | அருகன் - சிவன் - திகம்பரன் (௩) |
| திருவாணிகாட்டுமுப்பேர். | | |
| 13—௧௩. | | ௧௩. |
| பூகமேதிரளைபூகம் | பூகம் | திரண்டவடிவு - கமுகமரம் (௨) |
| புன்கணென்பதுநோய்துன்பம், | புன்கண் | வியாதி - துன்பம் (௨) |
| வாகுவேயழகுதோளாம் | வாகு | அழகு - புயம் (௨) |
| மாசியேமகமோர்மாதம், | மாசி | மகநட்சத்திரம் - ஓர்மாதம் (௨) |
| பாகமேபிச்சைபங்காம் | பாகம் | பிச்சை - பங்கு (௨) |
| பயோதரம்புயலேகொங்கை, | பயோதரம் | மேகம் - முலை (௨) |
| வாகைபண்பொழுக்கம்வெற்றி | வாகை | குணம்-ஒழுக்கம்-விசயம் - தவம்- |
| தவந்தொழில்வழங்கன்மிக்காம். | | வேலை-கொடுத்தல்-மிகுதி (௭) |
| 14—௧௪. | | ௧௪. |
| நோக்கென்பதழகுபார்வை | நோக்கு | அழகு - கண் (௨) |
| நுதலென்பபுருவநெற்றி, | நுதல் | புருவம் - நெற்றி (௨) |
| சேக்கையேமிருகந்துஞ்சு | சேக்கை | விலங்கின் படுக்கையிடம் - |
| மிடமுலைசிறந்தபாயல், | | முலை - பாயல் (௩) |
| பூக்கமேகமுகூரென்ப | பூக்கம் | கமுகமரம் - ஊர் (௨) |
| புலிங்கந்தீப்பொறியூர்ப்புள்ளாம், | புலிங்கம் | நெருப்புப்பொறி-ஊர்க்குருவி ,, |
| ஆக்கம்பூமகள்செல்வப்பேர் | ஆக்கம் | இலக்குமி - செல்வம் (௨) |
| அறல்கருமணனீராமே. | அறல் | கருமணல் - நீர் (௨) |
| 15—௧௫. | | ௧௫. |
| சீகரங்கரகம்வீசுங் | சீகரம் | கரகம் - சாமரம் - துளி (௩) |
| கவரியுந்திவலையும்பேர், | | |
| சாகரந்துயிலொழித்தல் | சாகரம் | நித்திரையொழிப்பு - கடல் (௨) |
| சமுத்திரமிருபேர்சாற்றும், | | |
| காகுளிதவிசுகண்டத் | காகுளி | ஆசனம் - மிடற்றெழுமோ |
| தெழுமொலியிசையுங்காட்டும், | | சை - இசை (௩) |
| ஈகைபொன் கொடையின்டைப் | ஈகை | பொன் - கொடுத்தல் - இண் |
| பேர் | | டங்கொடி (௩) |
| ...சூரித்தன். | இரவி | மலை - சூரியன் (௨) |
| ௧௬. | | ௧௬. |
| ...ண்பு | தகை | அழகு - குணம் |

| | | | |
|---|---|---|---|
| தயையொடுபெருமைநாற்பேர், | | அன்பு - பெருமை | (ச) |
| அகியென்பதரவிரும்பாம் | அகி | பாம்பு - இரும்பு | (உ) |
| அரிட்டமேகள்ளுக்காக்கை, | அரிட்டம் | கள் - காக்கை | (உ) |
| ககமென்பதம்புபுள்ளாம் | ககம் | அம்பு - பறவை | (உ) |
| கடுத்தலொப்பையம்வேகம், | கடுத்தல் | உவமை - சந்தேகம்-சீக்கிரம் | (ங) |
| அகவல்பாமயில்குரல்கூத்து | அகவல் | ஓர்பா - மயிலொலி - ஆடல் | (ங) |
| அந்தமேயழகீறென்ப. | அந்தம் | அழகு - முடிவு | (உ) |
| 17—கஎ. | | கஎ. | |
| அக்கென்பவிடைமுரிப்பு | அக்கு | இடபத்தின் முரிப்பு - சங் | |
| மணிசங்குமணியுமாகும், | | குமணி | (உ) |
| நக்கலேநகையுண்டற்பேர் | நக்கல் | சிரிப்பு - புசித்தல் | (உ) |
| ஞாட்பமர்பாரங்கூட்டம், | ஞாட்பு | யுத்தம் - கனம் - கூட்டம் | (ங) |
| இக்கென்பகரும்புகள்ளாம் | இக்கு | கரும்பு - கள் | (உ) |
| ஈரமேகுளிர்ச்சியன்பு, | ஈரம் | குளிர்ச்சி - அன்பு | (உ) |
| மக்கண்மானுடர்சிறார்பேர் | மக்கள் | மனிதர் - பிள்ளை | (உ) |
| வளைத்தலேகொள்ளனீக்கல். | வளைதல் | கொள்ளுதல் - தள்ளுதல் | (உ) |
| 18—கஅ. | | கஅ. | |
| கேகயமஞ்ஞையோர்பண் | கேகயம் | மயில் - ஓர்பண் - அசுணப்புள் | (ங) |
| ணசுணமாக்கிளத்துமப்பேர், | | | |
| தோகையேமயில்வான்மஞ்ஞை | தோகை | மயில்வால் - மயில் - மிருகத் | |
| விலங்கின்வால்சொல்லுமப்பேர், | | தின்வால் | (ங) |
| போகமேபாம்பின்மெய்யும் | போகம் | பாம்பினுடல் - போகத்தின் | |
| போகத்தின்விகற்பமாகும், | | வேறுபாடு | (உ) |
| போகுதனெடுமைநேர்மை | போகுத | நீளம் - நேர்மை - போதல் | (ங) |
| போகுதலெனுமப்பேரே. | ல் | | |
| 19—கசு. | | கசு. | |
| கைக்கிளையிசைவிகற்ப | கைக்கி | இராகத்தின் வேறுபாடு - ஒரு | |
| மொருதலைக்காமமும்பேர், | ளை | தலைக்காமம் | (உ) |
| சுக்கைதாரகைமாலைப்பேர் | சுக்கை | நட்சத்திரம் - பூமாலை | (உ) |
| சூத்திரம்பொறிநூனூற்பா, | சூத்திரம் | இயந்திரம் - பஞ்சிநூல் - இல | |
| | | க்கணச்சூத்திரம் | (ங) |
| எக்கரேசொரிதலோடு | எக்கர் | சொரிதல் - குவிதல் | (உ) |
| குவிதலுமிருபேரொன்ப, | | | |
| மொக்குளேகுமிழிபூவின் | மொக்கு | நீர்க்குமிழி - பூவரும்பு | (உ) |
| முகுளெனமொழியலாமே. | ள் | | |

ககரவெதுகை முற்றிற்று.

---

## உ - வது. ஙகரவெதுகை.

| | | | |
|---|---|---|---|
| 20—க. | | க. | |
| புங்கமேயுயர்ச்சியம்பு | புங்கம் | உயர்ம் - அம்பு - அம்புக்குதை | (ங) |
| பொருமம்பிற்குதையுமப்பேரே, | | | |
| திங்களம்புலிமாதப்பேர் | திங்கள் | சந்திரன் - மாதம் | (உ) |
| சித்திரனோ[illegible]கன், | சித்திரன் | சித்திரகாரன் - தச்[illegible] | (உ) |

| | | |
|---|---|---|
| கங்கென்பவரம்பின்பக்கங்<br>கருந்தினைபருந்துமாமே, | கங்கு | வரம்பின்பக்கம் - கருந்தினை-பருந்து (௩.) |
| தொங்கலேபீலிக்குஞ்சந்<br>தூக்கொடுதொடுத்தமாலை. | தொங்கல் | பீலிக்குஞ்சம் - தூக்கு - தொடுத்தமாலை (௩.) |
| 21—உ. | | உ. |
| சங்கமேகணைக்காலோரெண்<br>சவைசங்குபுலவர்நெற்றி | சங்கம் | கணைக்கால் - ஓரிலக்கம் - கூட்டம்-சங்கு-புலவர்-நெற்றி (௬) |
| பங்கென்பமுடமேயாகும்<br>பாதியுஞ்சனியுமேற்கும், | பங்கு | முடம் - பாதி - சனி (௩.) |
| வங்கமேவெள்ளிநாவாய்<br>வழுதலையீயமாமே, | வங்கம் | வெள்ளி - மரக்கலம் - வழுதலை - ஈயம் (௪) |
| அங்கணஞ்சேறுமுற்ற<br>மாஞ்சலதாரைக்கும்பேர். | அங்கணம் | சேறு-முன்றில்-சலதாரை (௩.) |
| 22—௩. | | ௩. |
| ஞாங்கர்வேல்பக்கமுன்பு<br>மேலெனநான்குமாகும், | ஞாங்கர் | வேலாயுதம் - பக்கம் - முன்பு - மேல் (௪) |
| தூங்கலேநிருத்தம்யானை<br>துயில்சோம்பு தராசுதாழ்தல், | தூங்கல் | கூத்து - யானை - நித்திரை - சோம்பல் - தராசு - தாழ்தல் (௬) |
| வாங்கலேவளைத்தல்கொள்ளல் | வாங்கல் | வளைத்தல் - கொள்ளுதல் (உ) |
| வையென்பகூர்மைவைக்கோல், | வை | கூர்மை - வைக்கோல் (உ) |
| வேங்கைபொன்புலிமரப்பேர் | வேங்கை | பொன் - புலி - ஓர்மரம் (௩.) |
| வீநீக்கம்பூப்புட்சாவாம். | வீ | நீக்கம் - மலர் - பறவை-சாவு (௪) |
| 23—௪. | | ௪. |
| மங்குல்காரிருள்விண்முப்பேர் | மங்குல் | மேகம் - இருள் - ஆகாயம் (௩.) |
| மருந்தமுதொடுமருந்தாம், | மருந்து | அமுதம் - மருந்து (உ) |
| பங்கியேபிறமயிர்க்கும்<br>பகருமாண் மயிர்க்கும்பேராம், | பங்கி | பிறமயிர் - குடுமி (உ) |
| அங்கதம்பன்னகர்தோ ளணி<br>யுடன்வசைச்சொல்லாகும், | அங்கதம் | பாம்பு - வாகுவலயம் - வசைச்சொல் (௩.) |
| பங்கமேசேறுதூசு<br>பழுதொடுபின்னமாமே. | பங்கம் | சேறு - வஸ்திரம் - குற்றம் - வேறுபாடு (௪) |
| 24—௫. | | ௫. |
| அங்கமேயுடலுறுப்பென்<br>பாறங்கங்கட்டிலெம்பேர், | அங்கம் | உடல் - அவயவம் - எலும்பு-வேதாங்கம் - கட்டில் (௫) |
| பிங்கலம்பொன்னும்பொன்னி<br>னிறத்தையும்பேசலாகும், | பிங்கலம் | பொன் - பொன்னிறம் (உ) |
| பொங்கரேமரத்தின்கோடு<br>பொருப்புயரிலவுமுப்பேர், | பொங்கர் | மரக்கொம்பு - மலை - இலவமரம் (௩.) |
| பொங்கலேகொதித்தன்மிக்காம் | பொங்கல் | பொங்குதல் - மிகுதி (உ) |
| பொச்சாப்புமறவிதீதாம். | பொச்சாப்பு | மறதி - பொல்லாங்கு (உ) |

ஙகரவெதுகை முற்றிற்று.

## ௩-வது. சகரவெதுகை.

| | | |
|---|---|---|
| 25—க. | | க. |
| பாசனமென்பசுற்றம் | பாசனம் | உறவு-பாத்திரம்-உண்கலம் (௩) |
| பாண்டமுண்கலமும் பன்னும், | | |
| வாசமேயிருப்பிடம்பூ | வாசம் | இருப்பிடம் - பூமணம் - பற |
| மணம்புள்ளின்சிறகுதூசாம், | | வையினிறகு - வஸ்திரம் (௪) |
| கோசமேமதிலுறுப்பாண் | கோசம் | மதிலுறுப்பு-ஆண்குறி - முட் |
| குறிமுட்டை முறைபண்டாரம் | | டை-புத்தகம் - பொக்கசம்(ரு) |
| தேசிகன்வணிகன்றேசாந் | தேசிகன் | செட்டி - தேசாந்திரி - குரு (௩) |
| திரியொடுகுருவுமாமே. | | |
| 26—உ. | | உ. |
| மூசன்மொய்த்திடல்சாவென்ப | மூசல் | மொய்த்தல் - சாவு (உ) |
| முடலேயேதிரட்சியுண்டை, | முடலை | திரண்டவடிவு - உருண்ட |
| | | வடிவு (உ) |
| கீசகங்குரங்குவேயாம் | கீசகம் | குரங்கு - மூங்கில் (உ) |
| கேழ்திறமொளியொப்பாகும், | கேழ் | நிறம் - பிரகாசம் - ஒப்பு (௩) |
| வீசலேயெறிதலீவாம் | வீசல் | எறிதல் - கொடுத்தல் (உ) |
| வெம்மையுட்டினம்விருப்பம், | வெம்மை | வெப்பம் - ஆசை (உ) |
| கேசரமகிழ்பூந்தாதாம், | கேசரம் | மகிழமரம் - பூந்தாது (உ) |
| கிருட்டியோரீற்றுப்பன்றி. | கிருட்டி | தலையீற்றுப்பசு - பன்றி (உ) |
| 27—௩. | | ௩. |
| அசிபடைக்கலமேவாளே | அசி | ஆயுதம் - வாள் - அவமதிச் |
| யவமதிச்சிரிப்புமுப்பேர், | | சிரிப்பு (௩) |
| நிசியிராமஞ்சள்பொன்னும் | நிசி | இரவு - மஞ்சள் - பொன் (௩) |
| நீர்புனல்குணம்பூராடம், | நீர் | சலம் - பண்பு - பூராட நக்ஷத் |
| | | திரம் (௩) |
| பிசியென்பபொய்யுஞ்சோறும் | பிசி | பொய் - சோறு - அரும்பொ |
| பேசரும்பொருளுமுப்பேர், | | ருள் (௩) |
| சுசிகோடைசுத்தந்தீயாம் | சுசி | கோடைகாலம் - சுத்தம் - நெ |
| | | ருப்பு (௩) |
| சுடர்விளக்கிரவியங்கி. | சுடர் | விளக்கு - சூரியன் - நெருப்பு(௩) |
| 28—௪. | | ௪. |
| ஆசென்பவிரைவுகுற்ற | ஆசு | சீக்கிரம் - குற்றம் - சிறுமை- |
| மற்பமெய்க்கவசமாற்பேர், | | மெய்க்கவசம் (௪) |
| காசென்பகோழைகுற்றங் | காசு | கோழை - குற்றம் - இரத் |
| கதிர்விடுமணிமுப்பேரே, | | தினம் (௩) |
| ஆசினிபலாவிசேட | ஆசினி | ஈரப்பலா - மரவுரி - மரவயி |
| மரவுரிமரக்காழ்விண்ணும், | | ரம்-ஆகாயம் (௪) |
| தேசிகமழகுகாந்தி திசைச்சொல் | தேசிகம் | அழகு - ஒளி - அவ்வவ்நாட் |
| லோர்கூத்துச்செம்பொன். | | டுச்சொல் - ஓர்கூத்து - செ |
| | | ம்பொன் (ரு) |
| 29—ரு. | | ரு. |
| பச்சையேமரகதந்தோல் | பச்சை | மரகதம் - தோல் - ஓர் வாச |
| புரிமணப்புதன்மால்புந்தி,... | | னைப்புதல் - திருமால் - புதன்(௫) |

| | | |
|---|---|---|
| கச்சையென்பததழும்பு<br>கயிறொடுகவசமும்பேர்; | கச்சை | உடற்றழும்பு - கயிறு - கவசம் (௩) |
| செச்சைமைவெட்சிதேய்வை | சேச்சை | ஆடு - வெட்சி - சந்தின்குழம்பு (௩) |
| திகையென்பதிசைசுணங்காம், | திகை | திசை - தேமல் (௨) |
| மிச்சையேபொய்த்தலாகு<br>மிடித்தலஞ்ஞானமும்பேர். | மிச்சை | பொய் - தரித்திரம் - அறிவில்லாமை (௩) |
| 30—௬. | | ௬. |
| பிச்சமாண்மயிரும்பீலிக்<br>குடையும்வெண்குடையுமாகும், | பிச்சம் | குடுமி - பீலிக்குடை - வெள்ளைக்குடை (௩) |
| கச்சம்யானைக்கழுத்திற்<br>கயிறளவொடுமரக்கால், | கச்சம் | யானைக்கழுத்திடுகயிறு - அளவு - மரக்கால் (௩) |
| எச்சமேகுறைசேயாகம் | எச்சம் | குறைவு - புத்திரன் - யாகம் (௩) |
| இபமென்பமரக்கோடியானை, | இபம் | மரக்கொம்பு - யானை (௨) |
| அச்சமேயகத்தியைம்மை<br>யஞ்சலிம்மூப்பேராமே. | அச்சம் | அகத்திமரம் - அச்சவடிவு - பயம் (௩) |
| 31—௭. | | ௭. |
| ஆசையேதிசைபொன்னன்பாம் | ஆசை | திக்கு - பொன் - இஷ்டம் (௩) |
| ஆகுலம்வருத்தமோசை, | ஆகுலம் | வருத்தம் - சத்தம் (௨) |
| காசையேகாயாநாணல் | காசை | காசாஞ்செடி - நாணற்புல் (௨) |
| காமர்தானழகுகாதல், | காமர் | அழகு - ஆசை (௨) |
| பாசமேகயிறுகூளி<br>பசுநசித்தொளையன்பாகும், | பாசம் | கயிறு - பிசாசம் - ஊசித்தொளை - அன்பு (௪) |
| தூசென்பதாடையானைப்<br>புரசைதூசிப்படைப்பேர் | தூசு | புடைவை - யானைப்புரசை - படைமுன்னணி (௩) |
| 32—௮. | | ௮. |
| தாசியேபரணிசூலை | தாசி | பரணிநக்ஷத்திரம் - வேசி (௨) |
| தளியென்பதளியேகோயில், | தளி | தளி - கோயில் (௨) |
| வேசரிகழுதையேகோ<br>வேறுவேசரியுமாகும், | வேசரி | கழுதை - கோவேறுகழுதை (௨) |
| ஆசுகம்பகழிகாற்றும் | ஆசுகம் | அம்பு - காற்று (௨) |
| அந்தரியுமையேதுர்க்கை, | அந்தரி | பார்வதி - துர்க்கை (௨) |
| கோசிகஞ்சாமவேதங்<br>கூறுபட்டாடைக்கும்பேர். | கோசிகம் | சாமவேதம் - பட்டுவஸ்திரம் (௨) |
| 33—௯. | | ௯. |
| பசுவேறுசிவனுவாம் | பசு | இடபம் - உயிர் - பசு (௩) |
| பாரதிவாணிதோணி, | பாரதி | சரஸ்வதி - தோணி (௨) |
| வசுவேயான்கன்றும்பொன்னும்<br>வசுக்களுந்தீயுநாற்பேர், | வசு | பசுவின்கன்று - பொன் - தேவர்களிலோர் பிரிவாகிய அஷ்டவசுக்கள் - நெருப்பு (௪) |
| அசமூவாண்டுநெல்லாடாம் | அசம் | மூன்றுவருடத்துநெல் - ஆடு (௨) |
| அணையென்பகணையேமெத்தை, | அணை | கணை - மெத்தை (௨) |
| சசியென்பகர்ப்பூரஞ்சந்<br>திரனிந்திராணிமுப்பேர். | சசி | கர்ப்பூரம் - சந்திரன் - இந்திராணி (௩) |
| 34—௰. | | ௰. |
| ...சும்புபொன்றுலகமேகம்<br>விண்ணொடுதிசையுநாற்பேர், | விசும்பு | தேவலோகம் - மேகம் - ஆகாயம் - திசை (௪) |

| | | | |
|---|---|---|---|
| தசும்புநற்குடமிடாவாம் | தசும்பு | குடம்-மிடா | (உ) |
| சாத்தனேயருகனையன், | சாத்தன் | அருகன்-அரிகரபுத்திரன் | (உ) |
| இசைபுகழ்கிளவிபாட்டாம் | இசை | புகழ்-சொல்-பாட்டு | (௩) |
| ஏங்கலேயொலியிரங்கல், | ஏங்கல் | சத்தம்-அழுதல் | (உ) |
| பிசுனனேகோளன்பொய்ய<br>னுலோபனும்பேசுமுப்பேர். | பிசுனன் | கோளன் - பொய்யன்-உலுத்தன் | (௩) |
| 35—௩௫. | | ௧௧. | |
| வச்சிரஞ்சதுரக்கள்ளி<br>வயிரமேகுலிசமுப்பேர், | வச்சிரம் | சதுரக்கள்ளி - வயிரம் - வச்சிராயுதம் | (௩) |
| நொச்சியேசிந்துவார<br>மதில்சிற்றூர் நுவலலாமே, | நொச்சி | நொச்சிச்செடி - மதில் - சிற்றூர் | (௩) |
| தச்சனேசித்திரைப்பேர்<br>தபதியன்றூனுமாகும், | தச்சன் | சித்திரைநக்ஷத்திரம் - தச்சன் | (உ) |
| உச்சிநண்பகலுச்சிப்பேர் | உச்சி | நடுப்பகல் - உச்சந்தலை | (உ) |
| உறுப்பவயவமுடம்பாம். | உறுப்பு | அவயவம் - சரீரம் | (உ) |
| 36—௩௬. | | ௧௨. | |
| பாசென்பபசுமைமூங்கில் | பாசு | பசுமை - மூங்கில் | (உ) |
| பப்பென்ப பரப்பொடொப்பாம், | பப்பு | பரப்பு - ஒப்பு | (உ) |
| மாசென்பசிறுமைகுற்ற<br>மழையழுக் கொடுகாற் பேரே, | மாசு | அற்பம் - குற்றம் - மேகம் - அழுக்கு | (௪) |
| கேசம்பென் மயிர்க்குமாண்பான்<br>மயிருக்குங் கிளத்தலாகும், | கேசம் | கூந்தல் - குடுமி | (உ) |
| வாசியேகுழன்முன்னுன்மா<br>வாசியென்னேவலுற்பேர். | வாசி | இசைக்குழல் - அச்சுவினிநக்ஷத்திரம்-குதிரை-வாசியென்னேவல் | |
| 37—௩௭. | | ௧௩. | |
| மிசையென்பதுணவுமேடு<br>மீமிசைச் சொல்லுமுப்பேர், | மிசை | உணவு - மேடு-மீமிசைச்சொல் | (௩) |
| விசயமேவென்றிவெல்லம்<br>வெங்கதிர் மண்டலப்பேர், | விசயம் | வெற்றி - வெல்லம் - சூரியமண்டலம் | (௩) |
| முசலியேயுடும்புதாழை<br>முந்தியவிராமனுேந்தி, | முசலி | உடும்பு - தாழை-பலதேவன்-ஓந்தி | (௪) |
| வசதிநல்லிடமூர்வீடாம் | வசதி | நல்லிடம் - ஊர் - வீடு | (௩) |
| வரனயன்பரமன்காந்தன், | வரன் | பிரமன் - சிவன் - தலைவன் | (௩) |

சகரவெதுகை முற்றிற்று.

---

## ஞ - வது. ஞகரவெதுகை.

| | | | |
|---|---|---|---|
| 38—௩௮. | | ௧. | |
| துஞ்சலேநிலைபெறுகுந்<br>துயில்சோம்புசாவுமாகும், | துஞ்சல் | நிலைபெறுதல் - நித்திரை-சோம்பல் - சாவு | (௪) |
| பஞ்சரஞ்செருந்திகூடாம் | பஞ்சரம் | செருந்திமரம் - கூடு | (உ) |
| பாதரோகழியர்நா[illegible], | பாதர் | செய்தனிலமாக்கு[illegible] - செட்டிகள் | (உ) |

| | | |
|---|---|---|
| கஞ்சமேதாளங்குல்லை கமலம்வெண்கலம்வட்டப்பம், | கஞ்சம் | தாளம் - கஞ்சா - தாமரை - வெண்கலம் - அப்பம். (௫) |
| குஞ்சமீயோட்டிநாழி குறள்குன்றிகுறளைச்சொல்லே. | குஞ்சம் | ஈயோட்டி - நாழி - குறுமை - குன்றிக்கொடி - குறளைச்சொல் (௫) |
| 39—௩௯. | | ௨. |
| நெஞ்செனபமனமார்பின்பேர் | நெஞ்சு | மனம் - மார்பு (௨) |
| நிழல்செல்வங்குளிர்ச்சிசாயை, | நிழல் | செல்வம் - குளிர்ச்சி - நிழல் (௩) |
| மஞ்சுபூண்வலிவனப்பு மழையானை முதுகிவ்வைந்தே, | மஞ்சு | ஆபரணம் - வலிமை - அழகு - மேகம் - யானைமுதுகு (௫) |
| வஞ்சிமேற்செல்வோரூர்பா வல்லிமென் மருங்குற் பெண்ணும் | வஞ்சி | பகைவர்மெற்செல்லுதல் - ஒரூர் - ஓர்பா - ஓர்கொடி - பெண் (௫) |
| தஞ்சமேயெளிமையென்ப தருபற்றுக்கோடுமாமே. | தஞ்சம் | எளிமை - பற்றுக்கோல் (௨) |
| 40—௪0. | | ௩. |
| அஞ்சனங்கறுப்புமைதிக் கானையிலொன்றும்பேர், | அஞ்சனம் | கறுப்பு - மை - மேற்திசை யானை (௩) |
| மஞ்சரியேபூங்கொத்து மாலைசெந்தளிருமாகும், | மஞ்சரி | பூங்கொத்து - பூமாலை - தளிர் (௩) |
| அஞ்சலிவணங்கல்வாவற் பறவையுமாகுமென்ப, | அஞ்சலி | கும்பிடல் - வாவற்பறவை (௨) |
| இஞ்சியேபுரிசையிஞ்சி | இஞ்சி | மதில் - இஞ்சி (௨) |
| எறுழெனபவலிதண்டாமே. | எறுழ் | வலிமை - தண்டாயுதம் (௨) |
| 41—௪௧. | | ௪. |
| கிஞ்சுகமுருக்குச்செம்மை | கிஞ்சுகம் | முருக்கமரம் - சிவப்பு (௨) |
| கிருட்டினன்ருன்மால்பார்த்தன், | கிருட்டினன் | கண்ணன் - அருச்சுனன் (௨) |
| கஞ்சனமேகண்ணடி கரிக்குருவிக்கும்பேரே, | கஞ்சனம் | கண்ணடி - கரிக்குருவி (௨) |
| பஞ்சமேசிறுமையைந்தாம் | பஞ்சம் | சிறுவிலைக்காலம் - ஐந்து (௨) |
| பகழியம்பிதன்குதைப்பேர், | பகழி | அம்பு - அம்புக்குதை (௨) |
| வஞ்சனைமாயைபொய்யாம் | வஞ்சனை | மாயை - பொய் (௨) |
| மாயன்மால்கருநிறத்தோன். | மாயன் | திருமால் - கருநிறத்தோன் (௨) |
| 42—௪௨. | | ௫. |
| குஞ்சியாண்மயிர்புட்பார்ப்புக் குன்றியின்புதன்மும்பேரே, | குஞ்சி | குடுமி - பறவைக்குஞ்சு - குன்றிப்புதர் (௩) |
| வஞ்சமேகபடம்வாளாம் | வஞ்சம் | கபடம் - வாளாயுதம் (௨) |
| மாயம்வஞ்சனைபொய்யென்ப, | மாயம் | வஞ்சனை - பொய் (௨) |
| கஞ்சனேகுறளன்வேதன் | கஞ்சன் | குறியன் - பிரமன் (௨) |
| களங்கந்தானழுக்குக்குற்றம், | களங்கம் | அழுக்கு - குற்றம் (௨) |
| கஞ்சிகைசிவிகையாடை கட்டிடுதிரையுமாமே. | கஞ்சிகை | தண்டிகை - வஸ்திரம் - திரைச்சீலை (௩) |

ஞகரவெதுகை முற்றிற்று.

# ௫-வது. டகரவெதுகை.

| | | |
|---|---|---|
| 43—௪௩. | | ௧. |
| நடலைவஞ்சனைபொய்யென்ப நடுங்கிய நுடக்கமும்பேர், | நடலை | கபடம் - பொய் - அசைவு (௩) |
| மடல்பனையேடுபோல்வ மலரிதழோர் நூற்கும்பேர், | மடல் | பனையேடுபோல்வன - பூவி தழ் - ஓர்பிரபந்தம் (௩) |
| படர்நடைநினைப்புநோவாம் பகர்ந்திடில்வீரர்க்கும்பேர், | படர் | வழி - நினைப்பு - துன்பம் - படைவீரர் (௪) |
| குடநகர்பசுவோர் கூத்துக் கும்பமேகரும்பின்கட்டி. | குடம் | பட்டணம் - பசு - ஓர்கூத்து- குடம் - வெல்லக்கட்டி (௫) |
| 44—௪௪. | | ௨. |
| மாடமேயுழுந்தோடில்லாம் | மாடம் | உளுந்து - வீடு (௨) |
| மழையென்பகுளிர்ச்சிமேகம், | மழை | குளிர்ச்சி - மேகம் (௨) |
| கூடமில்மறைவுகொல்லன் சம்மட்டிகுவட்டிஞச்சி, | கூடம் | வீடு - மறைவு - கொல்லன்சம் மட்டி - மலையுச்சி (௪) |
| சேடனோர்சாதிபாம்பன் செகந்தாங்குமனந்தனென்ப, | சேடன் | ஓர்சாதியான் - தோழன்-பூமி தாங்கு மனந்தனென்னும் பாம்பு (௩) |
| கேடகம்பரிசைவேறூர் கேடிவூர்பலகைமுப்பேர். | கேடகம் | தோற்பலகை-ஊர் - கேடகம்(௩) |
| 45—௪௫. | | ௩. |
| இடங்கரோமுதலைநூர்த்தார் குடங்கரிம்முப்பேரென்ப, | இடங்கர் | முதலை - விடர் - குடம் (௩) |
| முடங்கலேமடங்கல்கைதை மூங்கினோவியோலையைம்பேர், | முடங்கல் | மடங்குதல் - தாழை - மூங் கில் - வியாதி - ஓலை (௫) |
| படங்குமேற்கட்டியென்ப பகர்பெருங்கொடியுமாகும், | படங்கு | மேற்கட்டி - பெருங்கொடி (௨) |
| விடங்கமோர்கொடிகொடுங்கை | விடங்கம் | அழகு - துகிற்கொடி - கொ டுங்கை (௩) |
| மிதவையேதெப்பஞ்சோறும். | மிதவை | தெப்பம் - சோறு (௨) |
| 46—௪௬. | | ௪. |
| குடிஞைபுட்பொதுவும்யாறுங் கூகையுமாகுமென்ப, | குடிஞை | பறவைப்பொது - நதி - கோ ட்டான் (௩) |
| தடிவயலுலக்கைவில்லுந் தண்டுமின்றசையுடம்பாம், | தடி | கழனி - உலக்கை- தண்டாயுதம் - மின்னல் - தசை - உடம்பு (௬) |
| தொடிவளையொருபலப்பேர் சூழ்ந்தகங்கணமுமாகும் | தொடி | கைவளை-ஒருபலம்-கங்கணம் (௩) |
| மடியடங்குதலேசோம்பு வயிறுநோய் புடைவைதாழை. | மடி | அடங்குதல் - சோம்பல் - வயிறு - வியாதி-புடைவை-தாழை (௬) |
| 47—௪௭. | | ௫. |
| படிவமேவடிவநோன்பாம் | படிவம் | உருவம் - நோன்பு (௨) |
| பந்தமேகிளையுங்கட்டும், | பந்தம் | உறவு - கட்டு (௨) |
| வெடியச்சம்புரிமணிக்கு மென்புகைவெளியுமுப்பேர், | வெடி | பயம் - நறும்புகை - வெளி (௩) |

| | | |
|---|---|---|
| துடியேலம்பறைகாலப்பேர் | துடி | ஏலம் - குறிஞ்சிப்பறை - ஓர் காலம் (௩) |
| தூத்தூய்தூன்பற்றுக்கோடாம், | தூ | சுத்தம்-தசை-பற்றுக்கோடு (௩) |
| கொடிறுபூசங்கதுப்பாம் | கொடிறு | பூசநக்ஷத்திரம்-கபோலம் (௨) |
| துரவையேகடலோர்கூத்து. | துரவை | கடல் - ஓர்கூத்து (௨) |
| 48—௪௮. | | ௬. |
| கடிகைநாழிகையேதுண்டங் கதவிடுதாளேமுப்பேர், | கடிகை | நாழிகை - துணிக்கை - கதவிடுதாள் (௩) |
| படிறுபொய்களவிரண்டாம் | படிறு | பொய் - களவு (௨) |
| பகர்தலேவிற்றல்பேசல், | பகர்தல் | விற்றல் - பேசல் (௨) |
| சுடிகையேமகுடமுச்சி சுட்டியுமிட்டபேரே, | சூடிகை | கிரீடம் - நடுத்தலை - நெற்றிச் சுட்டி (௩) |
| இடியிடிப்பேரேநென்மா வேற்றிடுமுறுதிச்சொல்லே. | இடி | இடி-நென்மா-உறுதிச்சொல் (௩) |
| 49—௪௯. | | ௭. |
| நாடிநாசிகைநரம்பாம் | நாடி | மூக்கு - நரம்பு (௨) |
| நந்தல்கேடுடனேயாக்கம், | நந்தல் | கேடு - ஆக்கம் (௨) |
| பாடியேநகரநாடு பாசறையாயரூர்ப்பேர், | பாடி | நகரம்-நாடு-முனைமேற்சென்றோருறைவிடம்-ஆயர்பாடி (௪) |
| கோடிகந்துகில்பூந்தட்டாம் | கோடிகம் | வஸ்திரம் - பூந்தட்டு (௨) |
| குடம்பையேமுட்டைகூடு, | குடம்பை | முட்டை - கூடு (௨) |
| கோடியென்புதுமைதூசாம் | கோடி | ஓரெண் - புதுமை-வஸ்திரம் (௩) |
| குடுமியேவெற்றியுச்சி. | குடுமி | விசயம் - உச்சி (௨) |
| 50—௫0. | | ௮. |
| உடுவின்மீன்கிடங்குநாவா யோட்டுங்கோலம்பிலீர்க்காம், | உடு | நக்ஷத்திரம்-அகழி-மரக்கலமோட்டுங்கோல்-அம்பினிறகு (௪) |
| கடுவிடமுள்ளுத்தானே யரிதகிகசப்புநாற்பேர், | கடு | நஞ்சு-முள்-கடுமரம்-கசப்பு (௪) |
| படுமரக்குலையேகள்ளுப் பரவுநீர்நிலைநன்மைப்பேர், | படு | மரக்குலை - கள் - குளம் - நன்மை (௪) |
| படுதலேயொலியின்றுதல் பகரிலுண்டாதல்பூத்தல். | படுதல் | சத்தம்-இல்லாமை - உண்டாதல் - பூத்தல் (௪) |
| 51—௫௧. | | ௯. |
| மாடுபொன்பக்கஞ்செல்வம் | மாடு | பொன் - பக்கம் - செல்வம் (௩) |
| வைகல்வைகறைநாடங்கல், | வைகல் | விடியற்காலம் - நாள் - தங்குதல் (௩) |
| சேடென்பபெருமைநன்மை திரட்சியேயழகுநாற்பேர், | சேடு | பெருமை - நன்மை - திரண்டவடிவு - அழகு (௪) |
| பாடிடம்பெருமையோசை | பாடு | இடம் - பெருமை - ஒலி (௩) |
| பட்டேபட்டாடைசிற்றூர் | பட்டு | பட்டுவஸ்திரம் - சிற்றூர் (௨) |
| ஈடென்பகுழைவேயொப்பே வலியொடுபெருமையென்ப. | ஈடு | நெகிழ்தல் - ஒப்பு - வலிமை - பெருமை (௪) |
| 52—௫௨. | | ௧0. |
| மடையென்பமுதருசோறு மணிப்பணிக் கடைப்பூட் டும் பேர், | மடை | மதகு - சோறு - ஆபரணக் கடைப்பூட்டு (௩) |

| | | |
|---|---|---|
| படைபடைக்கலங்கலப்பை<br>படுக்கைபல்லணமேதானை, | படை | ஆயுதம் - கலப்பை - நித்திரா<br>குதிரைச்சேணம் - சேனை (௫) |
| இடைநடுவென்பமற்று<br>மிடைப்பெயர்நுசுப்புமாமே, | இடை | நடு - இடம் - இடை (௩) |
| மடமறியாமைசத்திர<br>மன்னியமுனிவாசப்பேர். | மடம் | அறிவின்மை - சத்திரம் - முனி<br>வரிருப்பிடம் (௩) |
| 53—௫௩. | | ௧௧. |
| வாடையென்பதுதான்வீதி<br>வடகாற்றுத்தானுமாமே, | வாடை | தெரு - வடகாற்று (௨) |
| ஆடுமேழகம்வெற்றிப்பேர் | ஆடு | ஆடு-வென்றி (௨) |
| அல்கனாட்சுருங்கல்வைகல், | அல்கல் | நாள் - குறைதல் - தங்கல் (௩) |
| கோடைமேல்காற்றினோடு<br>குதிரைவெண்காந்தளென்ப, | கோடை | மேல்காற்று - குதிரை - வெ<br>ண்காந்தள் (௩) |
| ஓடைநீர்நிலையிடங்கே<br>யொளிமணிப் பட்டமும்பேர். | ஓடை | தடாகம் - அகழி - நெற்றிப்<br>பட்டம் (௩) |
| 54—௫௪. | | ௧௨. |
| அடுப்பென்பபரணிநாளே<br>யச்சமேசுல்லிமுப்பேர், | அடுப்பு | பரணிநக்ஷத்திரம் - பயம் -<br>அடுப்பு. (௩) |
| வடுச்செம்புதழும்புவண்டாம் | வடு | செம்பு - தழும்பு - வண்டு (௩) |
| மத்தகநெற்றிசென்னி, | மத்தகம் | நெற்றி - தலை (௨) |
| இடக்கரோமறைத்தவார்த்தை<br>கும்பமுமென்பநூலோர், | இடக்கர் | மறைத்தசொல் - குடம் (௨) |
| கடைப்பிடிமறப்பிலாமை<br>கருதியதேற்றமாமே. | கடைப்பி<br>டி | மறவாமை - தேற்றம். (௨) |
| 55—௫௫. | | ௧௩. |
| பட்டமேயோடைதாச<br>பதவிவாள்கவரிமாவாம், | பட்டம் | குளம் - வஸ்திரம் - பதவி -<br>வாள் - கவரிமா (௫) |
| புட்டமேகாகமாகும்<br>புடைவைபுநிறைவுமப்பேர், | புட்டம் | காக்கை - சீலை - நிறைவு (௩) |
| குட்டமேதொழுநோயாழங்<br>குளமெனப் பெயர்முப்பாற்றே | குட்டம் | குஷ்டவியாதி-ஆழம்-குளம் (௩) |
| வட்டமேபரிசைநீர்ச்சால்<br>வலயங்கைம்மணிதூசூர்கோள். | வட்டம் | கேடகம் - நீர்ச்சால் - வட்ட<br>வடிவு - கைம்மணி - சீலை-<br>பரிவேடம். (௬) |
| 56—௫௬. | | ௧௪. |
| திட்டையேயுரலுமேடுந்<br>திண்ணையுநன்னுமுப்பேர், | திட்டை | உரல் - மேடு - திண்ணை (௩) |
| தட்டைவேய் தினைத்தாள்கிள்ளை<br>தனைக்கடிகோலேமுண்டம் | தட்டை | மூங்கில் - தினைத்தாள் - கிளி<br>கடிகோல் - மொட்டை (௪) |
| கிட்டியேதலையீற்றுவாங்<br>கிருட்டியாத்தாளமும்பேர், | கிட்டி | தலையீற்றுப்பசு - பன்றி - கை<br>த்தாளம் (௩) |
| கட்டளைநிறைகல்லொப்பே<br>யிட்டிகையியற்றலாணி. | கட்டளை | நிறைபதிகருவி - உவமை -<br>செங்கலியற்றுங்கருவி - உ<br>ரையறிகருவி. (௪) |

| | | |
|---|---|---|
| 57—௫௭. | | ௧௫. |
| நாட்டங்கண்ணோர்பண்வாளாம் | நாட்டம் | கண் - ஓர்பண் - வாளாயுதம் (௩) |
| நாகுசங்கிளமைநத்தை, | நாகு | சங்கு - இளமை - நத்தை (௩) |
| ஓட்டமேலுதடேதோல்வி | ஓட்டம் | மேலுதடு - தோற்றல் (௨) |
| உயிரென்பகாற்றேசீவன், | உயிர் | காற்று - சீவன் (௨) |
| கோட்டங்கோண்படப்பைநாடு | கோட்டம் | கோணல் - மருதநிலத்தூர் - |
| கோயிலேளவியமான்கொட்டில் | | நாடு - கோயில் - அழுக்கா |
| | | று - தொழுவம் (௬) |
| தோட்டியங்குசங்கபாடம் | தோட்டி | யானைத்தோட்டி - கதவு (௨) |
| துணையென்பதளவுமொப்பும். | துணை | அளவு - ஒப்பு. (௨) |
| 58—௫௮. | | ௧௬. |
| தடமலைபெருமைகோணஞ் | தடம் | மலை-பெருமை-வளைவு-வழி - குள |
| சரிகரையகலம்வாவி, | | க்கரை-அகலம்-குளம் (௭) |
| அடல்கொலைவலிபோராகும் | அடல் | கொல்லுதல் - வல்லமை - யுத் |
| | | தம் (௩) |
| அருத்தமேபொருள்பொன்பாதி, | அருத்தம் | சொற்பொருள்-பொன்-பாதி (௩) |
| உடல்பொருளாகமென்ப | உடல் | பொன் - உடல் (௨) |
| வோங்கல்வெற்புயரமூங்கில், | ஓங்கல் | மலை - உயர்ச்சி - மூங்கில் (௩) |
| விடபமேயிடபராசி | விடபம் | இடபவிராசி - இடபம் - மரக் |
| விடைமரக்கொம்புமுப்பேர். | | கொம்பு. (௩) |
| 59—௫௯. | | ௧௭. |
| கடகமேசேனைவட்டங் | கடகம் | சேனை - வட்டவடிவு - கைவ |
| கைவளைமதிலுநாற்பேரே, | | ளை - மதில் (௪) |
| வடகந்தோலுத்தவாளம் | வடகம் | தோல் - உல்லாசம் (௨) |
| வலமென்பதிடமேவெற்றி, | வலம் | இடம் - வெற்றி (௨) |
| டடுவிகள்விற்பாள்குண்டம் | படுவி | கள்விற்பவள் - வசவி (௨) |
| பரமென்பகவசமெய்யாம், | பாரம் | கவசம் - சரீரம் (௨) |
| நொடிபிதிர்கிளவியாகும் | நொடி | கைந்நொடி - சொல் (௨) |
| நானநிச்சயமேகுன்றல். | நானம் | நிச்சயம் - குறைதல். (௨) |
| 60—௬௦. | | ௧௮. |
| கடங்கயிறுவாக்கதுப்புக் | கடம் | கயிறு-யானைக்கவுள் - காடு - |
| கான்சுரமுடம்புநீதி, | | அருநெறி - சரீரம் - நியாய |
| குடங்கடாமீமம்யானைக் [ம், | | ம் - குடம் - யானைமதம் - |
| குழாங்கடன் முழவைந்தேழா | | சுடலை - யானைக்கூட்டம் - |
| | | கடன்-குடமுழா. (௧௨) |
| மடங்கலேயசனிசிய | மடங்கல் | இடி-சிங்கம் - இயமன் - வியாதி - |
| மறலிநோயுகமூழித்தீ, | | யுகம் - வடவாமுகாக்கினி (௬) |
| படங்கரிமுகபடாநற் | படம் | யானைமுகபடாம் - வஸ்திரம்- |
| றுகில்பாம்பின்பணமுப்பேரே. | | பாம்பின்படம். (௩) |
| 61—௬௧. | | ௧௯. |
| ஆடலேபெண்ணாண்கூடல் | ஆடல் | பெண்ணாண்கூடல்-வார்த்தை |
| வார்த்தைகூத் தாடல்வென்றி, | | கூத்தாடல் - வெற்றி (௪) |
| பாடலஞ்சிவப்பினோடு | பாடலம் | சிவப்பு-பாதிரிமரம்-குதிரை (௩) |
| பாதிரிகுதிரைமுப்பேர், | | |
| கோடரங்குரங்குசோலை | கோடரம் | குரங்கு - சோலை-மரக்கொம் |
| கொம்பொடுகுதிரையாகும், | | புகுதிரை (௪) |

| | | |
|---|---|---|
| ஆடவர்புருடர்நாம<br>மாமிளையவர்க்கும்பேரே. | ஆடவர் | ஆண்மக்கள் - இளைஞர் (உ) |
| 62—சுஉ. | | உ0. |
| கடிமணம்விரைவுகூர்மை<br>காலம்பேய்விளக்கங்காப்பு,<br>வடிவச்சம்வாசனமையம்<br>வரைவுவிம்மிதமேழாறும், | கடி | கலியாணம் - சீக்கிரம் - கூர்<br>மை - காலம்-பிசாசம் - விளக்<br>கம்-காவல்-அல்குல்-பயம்-<br>வாசனை-சந்தேகம்-நீக்கல்-<br>அதிசயம் (கங) |
| வடுகேயிந்தளராகப்பேர்<br>மருதயாழ்த்திறனுமாமே, | வடுகு | இந்தளராகம் - மருதயாழ்த்<br>திறம் (உ) |
| வடவையேகுதிரைப்பெட்டை<br>யுவாப்பிடிவடவைத்தீயாம். | வடவை | பெண்குதிரை - பெண்யானை-<br>ஊழித்தீ. (ஙு) |
| 63—சுங. | | உக. |
| கோடுசங்கூதுகொம்பு<br>மரக்கொம்புவிலங்கின்கொம்பு<br>நீடுசெய்வரம்புகுன்றின்<br>முகடுநீர்க்கரையேழ்பேராம், | கோடு | சங்கு - ஊதுகொம்பு - மரக்<br>கொம்பு - மிருகத்தின்கொ<br>ம்பு - கழனிவரம்பு - மலையி<br>னுச்சி - நீர்க்கரை (எ) |
| மோடுமேடுதரமாகும் | மோடு | மேடு - வயிறு (உ) |
| முறுவலேநகைத்தல்பல்லாம், | முறுவல் | சிரித்தல் - பல் (உ) |
| ஆடியேயோர்மாதங்கண்<br>ணடியுத்திராடமாமே, | ஆடி | ஓர்மாதம் - கண்ணடி - உத்தி<br>ராட நக்ஷத்திரம். (ஙு) |
| 64—சுச. | | உஉ. |
| தட்டுத்தேர்நடுவுகுற்றந்<br>தட்டொடுபரிசைமுட்டாம், | தட்டு | தேர்நடுவு - குற்றம் - தட்டு -<br>கேடகம் - விக்கினம். (ரு) |
| செட்டிவாணிகன்செவ்வேளாம் | செட்டி | செட்டி - முருகன். (உ) |
| செப்புரைகரண்டகப்பேர், | செப்பு | சொல் - கரண்டகம் (உ) |
| மட்டென்பதெல்லைகள்ளாம் | மட்டு | எல்லை - கள் (உ) |
| மார்க்கமேசமயம்வீதி, | மார்க்கம் | சமயம் - தெரு (உ) |
| பட்டிகையென்பகச்சுப்<br>பகடுடனிரதமாமே. | பட்டிகை | மூலைக்கச்சு - தெப்பம் - அரை<br>ஞாண். (ஙு) |
| 65—சுரு. | | உங. |
| கடைமுடிவிடம்வாயிற்பேர் | கடை | முடிவு - இடம் - வாயில் (ஙு) |
| களேபரம்பிணமுடம்பாம், | களேபர<br>ம் | பிரேதம் - சரீரம் (உ) |
| உடைதுகில்செல்வமென்ப | உடை | வஸ்திரம் - செல்வம் (உ) |
| உடுக்கைதன்னுமைதுகிற்பேர், | உடுக்கை | உடுக்கை - வஸ்திரம் (உ) |
| அடையிலைகனமேயப்ப [ம்,<br>மடுத்தல்செல்வழியைம்பேரா | அடை | இலை - பாரம் - அப்பம் - அ[illegible]<br>த்தல் - வழி (ரு) |
| நடைவழியொழுக்கஞ்செல்வம் | நடை | வழி - ஒழுக்கம் - செல்வம் (ஙு) |
| நாரென்பகயிறன்பாமே. | நார் | கயிறு - இஷ்டம். (உ) |
| 66—சுசு. | | உச. |
| விடையெதிர்மொழியுமேறும்<br>விடுத்தலும்விளம்புமுப்[illegible] | விடை | எதிர்மொழி - இடபம் - அனு<br>ப்பு[illegible] (ஙு) |
| கிடைகிடையுவமை[illegible] | கிடை | கிடை - உவமை - சடை (ஙு) |
| கீதமே[illegible]மே, | கீதம் | [illegible]ராகம் - வண்டு (உ) |

| | | |
|---|---|---|
| படியன்கவடிசோபானம் | படி | குதிரையங்கவடி - கற்படி - |
| பகைகுணமுவமைபாராம், | | பகை - பண்பு - ஒப்பு - பூமி (சு) |
| குடிகுலம்புருவமூராம், | குடி | சாதி - புருவம் - ஊர் (ங) |
| கொடிவல்லிதுவசங்காக்கை. | கொடி | படர்கொடி - துகிற்கொடி - கா |
| | | க்கை (ங) |
| 67—சுஎ. | | உரு. |
| நட்டமேநடனங்கேடாம் | நட்டம் | கூத்து - கேடு (உ) |
| நகரென்பமனையுமூரும், | நகர் | வீடு - ஊர் (உ) |
| தொட்டலென்பதுவேயுண்ட [ர் | தொட்டல் | உண்டல் - தோண்டுதல் - கை |
| றோண்டல்கைதீண்டன்முப்பே | | யாற் றொடுதல் (ங) |
| தட்டலேதடைகிட்டற்பேர் | தட்டல் | தடுத்தல் - கிட்டுதல் (உ) |
| தையொருமாதம்பூசம், | தை | ஓர்மாதம் - பூசநக்ஷத்திரம் (உ) |
| கட்டலென்பதுதடுத்தல் | கட்டல் | தடுத்தல் - களைதல் - கட்டல் - |
| களைதல்பந்தித்தல்கள்ளல். | | திருடல். (சு) |
| 68—சுஅ. | | உசு. |
| புட்கரநிறைவுபாண்ட [ம், | புட்காம் | நிறைவு - பாண்டமுகம் - தீர்த் |
| முகந்தீர்த்தம்புனல்வான்சேன | | தம் - நீர் - ஆகாயம் - பருந்து - |
| கட்கம்பங்கயமேயானைக் | | வாளாயுதம் - தாமரை - யா |
| கைநுனிகுருகினைத்தாம், | | னைத்துதிக்கைநுனி - குருகெ |
| | | னு மோர்பறவை (க0) |
| வெட்சியென்பதுவேசெச்சை | வெட்சி | வெட்சிப்பூஞ்செடி - பகைஞர்பசுக் |
| நிரநிரைகவர்தலென்ப | | கூட்டத்தைக்கவர்தல் (உ) |
| பெட்பென்பபெருமையன்பாம் | பெட்பு | பெருமை - இஷ்டம் (உ) |
| பிரசந்தேன்மதுவண்டாமே | பிரசம் | தேன் - கள் - வண்டு (ங) |
| 69—சுகூ. | | உஎ. |
| அடுதலேயட்டலென்ப | அடுதல் | தீயிற்பாகமாக்குதல் - நெருங் |
| வடர்தலுங்கொலையுமுப்பேர், | | கல் - கொல்லுதல் (ங) |
| சடிலமேநெருங்கலோடு | சடிலம் | நெருங்கல் - சடை - குதிரை. (ங) |
| சடைகுதிரையுமுப்பேரே, | | |
| படலையேபடர்தன்மாலை | படலை | பரந்தவழிவு - பூமாலை - வாய |
| பதலையேவாசிக்கோவை, | | கன்றபறை - குதிரைக்கிண் |
| | | கிணிமாலை (ச) |
| கிடுகுதேர்மரச்சுற்றின்பேர் | கிடுகு | தேரின்மரச்சுற்று - கேடகம். (உ) |
| பரிசைக்குங்கிளத்தலாமே. | | |
| 70—எ0. | | உஅ. |
| படலிகைபீர்க்குவட்டம் | படலிகை | பீர்க்கு - வட்டவடிவு - கைம் |
| பரந்தகைம்மணிபூந்தட்டாம் | | மணி - பூந்தட்டு (ச) |
| கொடியனேகொடியன்கேதாம் | கொடிய | துன்மார்க்கன் - கேதுவெனு |
| | ன் | ம் பாம்பு (உ) |
| குண்டாழந்தாழ்வாண்மாவே, | குண்டு | ஆழம் - தாழ்வு - ஆண்குதிரை (ங) |
| தொடுவென்பமருதப்பூமி | தொடு | மருதநிலம் - தோட்டம் - வஞ் |
| தோட்டங்கைதவமுப்பேரே, | | சம் (ங) |
| முடிமயிர்முடியேசென்னி | முடி | மயிர்முடி - தலை - கிரீடம். (ங) |
| மகுடமுமொழியலாமே. | | |
| 71—எக. | | உகூ. |
| ஆடகந்துவரைபொன்னும் | ஆடகம் | துவரை - பொன் (உ) |

| | | |
|---|---|---|
| அஞரறிவிலரோதுக்கம், | அஞர் | அறிவிலார் - துயரம் (உ) |
| கோடகமுடியுறுப்புங்<br>குதிரையும்புதுமையும்பேர், | கோடகம் | முடியுறுப்பு - குதிரை - புது<br>மை (ங) |
| பீடிகையாவணம்பூந்<br>தட்டொடுபீடமும்பேர், | பீடிகை | கடைவீதி-பூந்தட்டு-ஆசனம் (ங) |
| தோடுபூவிதழேபெண்ணை<br>மடல்போல்வ தொகுதிக் கும்<br>பேர். | தோடு | பூவினிதழ் - பனையேடுபோல்<br>வன - கூட்டம் (ங) |
| 72—எஉ. | | ஙഠ. |
| அடரென்பநெருங்குதற்பே<br>ராம்மையின்வடிவுமாகும், | அடர் | நெருங்குதல் - அச்சவடிவு (உ) |
| விடர்முனியிருப்புத்தூர்த்தர்<br>கமர்வெற்பின் முழைகாடைம்<br>பேர், | விடர் | முனிவரிருப்பிடம் - தூர்த்தர் -<br>வெடிப்பு - மலைப்பிளப்பு -<br>காடு (ரு) |
| விடலையேதலைவன்பேரும்<br>விறலோன்றன்பேருமாகும் | விடலை | பாலைநிலத்தலைவன் - வெற்றி<br>யாளன் (உ) |
| அடிசெண்டுவெளிதாளாதி<br>கவிதையின்பாதமாமே. | அடி | குதிரைவையாளிவீதி - கால் -<br>முதல் - பாட்டினடி (ச) |

டகரவெதுகை முற்றிற்று.

## சூ-வது. ணகரவெதுகை.

| | | |
|---|---|---|
| 73—எங. | | க. |
| புணர்வுதோய்ந்திடலிசைப்பாம் | புணர்வு | கலவி - இசைப்பு (உ) |
| பொழில்புவிபெருமைசோலை, | பொழில் | பூமி - பெருமை - சோலை (ங) |
| உணர்வென்பதெளிவேயூட<br>லொழிதலேயறிவுமாகும், | உணர்வு | தெளிவு - ஊடலொழிதல் -<br>அறிவு (ங) |
| குணமென்பகயிறுபண்பு<br>கும்பம்வின்ஞாணிறம்பேர், | குணம் | கயிறு - குணம் - குடம் - வில்<br>நாணி (ச) |
| கணமுடுநோய்திரட்சி<br>காலநுட்பம்பேய்வட்டம். | கணம் | நக்ஷத்திரம் - ஓர்நோய் -<br>கூட்டம் - காலநுட்ப<br>ம் - பேய் - வட்டவடிவு (சு) |
| 74—எச. | | உ. |
| ஆணமேகுழம்போடன்பாம் | ஆணம் | குழம்பு - இஷ்டம் (உ) |
| அலநாஞ்சிலமைவுமாமே, | அலம் | கலப்பை - அமையுமென்றல் (உ) |
| ஓணமாயோனுளாறும் | ஓணம் | திருவோணநக்ஷத்திரம் - நதி (உ) |
| ஊதியமிலாபங்கல்வி, | ஊதியம் | ஊதாயம் - வித்தை (உ) |
| காணமேபரியூண்செக்கோர்<br>கண்ணல்பொற்காசுமாம்பேர், | காணம் | குதிரையுணவு - செக்கு - ஓர்<br>கட்பிராணி - பொற்காசு (ச) |
| கோணலேமாறுபாடுங்<br>கூனுமாம்வளைவுமாமே. | கோணல் | மாறுபாடு - கூன் - வளைவு (ங) |

| | | |
|---|---|---|
| 75—எரு. | | ந. |
| குணில்குறுந்தடிகடிப்பாம் | குணில் | குறுந்தடி - பறையடிக்குங் குறுந்தடி. (உ) |
| குல்லையேதுளவுவெட்சி, | குல்லை | துளசி - வெட்சிப்பூஞ்செடி. (உ) |
| மணிநவமணியேகண்டை வனப்பொடுகருமைநன்மை, | மணி | நவமணி - யானைமணி - அழகு - கறுப்பு - நன்மை (ரு) |
| துணிசோதிநாளேதுண்டம் | துணி | சோதிநக்ஷத்திரம் - துண்டம் (உ) |
| துளிமழைத்துளிபெண்ணுமை, | துளி [ம் | மழைத்துளி - பெண்ணுமை (உ) |
| பிணிமுகமயில்புட்போராம் | பிணி முக | மயில் - பறவைப்பொது (உ) |
| பிசிதநீரிறைச்சிவேம்பு. | பிசிதம் | நீர் - இறைச்சி - வேம்பு (ங) |
| 76—எசு. | | ச. |
| நாணிலச்சைப்பேர்தானே கயிறென்றுநாட்டலாகும், | நாண் | வெட்கம் - கயிறு (உ) |
| தோணியேகடைநாள்வங்கந் தொடுகணைதெப்பஞ்சேறு, | தோணி | இரேவதிநக்ஷத்திரம் - மரக்கலம்-அம்பு-தெப்பம்-சேறு (ரு) |
| வாணியேயோர்கூத்தின்பேர் வாக்குநாமகளுமாமே, | வாணி | ஓர்கூத்து - சொல் - சரஸ்வதி (ங) |
| ஏணியேயுலகோடெல்லை [லும். யிறைவைமா னென்றுஞ்சொல் | ஏணி | உலகம் - எல்லை - ஏணி-மான் (ச) |
| 77—எஎ. | | ரு. |
| திணைநிலங்குலமொழுக்கம் | திணை | பூமி - சாதி - ஒழுக்கம் (ங) |
| செவியென்பகாதுகேள்வி | செவி | காது - கேள்வி (உ) |
| பிணையாசைவிலங்கின்பெண்பேர் | பிணை | ஆசை - பெண்மிருகம் (உ) |
| பிலவங்கங்குரங்குதேரை, | பிலவங்கம் | குரங்கு - தேரை (உ) |
| கணையம்புதிரட்சியும்பேர் | கணை | அம்பு-திரண்டவடிவு (உ) |
| கட்சியேகாடுங்கூடும், | கட்சி | காடு - பறவைக்கூடு (உ) |
| பணைவயல்பரியின்பந்தி பருத்தல்வேயரசுபீடாம். | பணை | கழனி - குதிரைப்பந்தி - பருத்தல் - மூங்கில் - அரசமரம் - பெருமை (சு) |
| 78—எஅ. | | சு. |
| யாணரேபுதுமைதச்ச ரெய்தியவனப்புநன்மை, | யாணர் | புதுமை - தச்சர் - அழகு - நன்மை (ச) |
| பாணந்தான்மேகவண்ணக் குறிஞ்சியெய்கணைபூம்பட்டாம் | பாணம் | மழைவண்ணக்குறிஞ்சி - அம்பு-பட்டுவஸ்திரம் (ங) |
| சேணென்பதகலநீளஞ் செப்பிடிலுயரமும்பேர், | சேண் | அகலம்-நீளம்-உயரம் (ங) |
| ஆணைமெய்யுடனேவென்றி சூளேவலாகுநாற்பேர். | ஆணை | உண்மை - வெற்றி - சபதம் - ஏவல் (ச) |
| 79—எகூ. | | எ. |
| அண்டமாகாயமுட்டை, | அண்டம் | ஆகாயம் - முட்டை (உ) |
| அயிலென்பவேலேகூர்மை, | அயில் | வேலாயுதம் - கூர்மை (உ) |
| துண்டமேசாணாப்பாம்பு துணியொடுவதன[ம்]மூக்காம், | துண்டம் | சாணாப்பாம்பு - துண்டம் - [illegible] - மூக்கு (ச) |
| கண்டமேகவசம்வெள்ளங் கழுத்திடுதிரைவாட்கண்டம், | கண்டம் | [illegible] - வெள்ளம் - கழுத்து - திரைச்சீலை - [illegible] |

| | | |
|---|---|---|
| முண்டகந்தாழைகள்ளு<br>முளரிமத்தகமுண்மூலம். | முண்டகம் | தாழை - கள் - தாமரை - நெற்றி - முட்செடி (ரு) |
| 80—௮௦. | | ௮ |
| அண்டரோபகைவர்வானோ<br>ராயரொன்றாகுமுப்பேர், | அண்டர் | பகைஞர் - தேவர் - இடையர் (௩) |
| சுண்டனேசதயநாளுஞ்<br>சூறனும்வேறுகாட்டும், | சுண்டன் | சதயநக்ஷத்திரம் - மூஞ்சூறு (௨) |
| கண்டல்கேதகைமுள்ளிப்பேர் | கண்டல் | தாழை - முள்ளிச்செடி (௨) |
| கணைதலேவிளித்தலோசை, | கணைதல் | அழைத்தல் - சத்தம் (௨) |
| பண்டம்பொன்பணிகாரப்பேர் | பண்டம் | பொன் - பலபண்டம் (௨) |
| பாகுபால்குழம்புபாக்காம். | பாகு | பங்கு - குழம்பு - பாக்கு (௩) |
| 81—௮௧. | | ௯ |
| விண்டென்பமாயோன்வெற்பு<br>மேகமேமூங்கில்காற்றும், [ன் | விண்டு | திருமால் - மலை - மேகம் - மூங்கில் - காற்று (ரு) |
| தொண்டென்பபழமையொன்பா<br>ன்றொழும்பொடுவழிபாடாமே, | தொண்டு | பழமை - ஒன்பது - அடிமை - வழிபடுதல் (௪) |
| தண்டென்பகுழாயேவீணை<br>தடிபடைமிதுனமோந்தி, | தண்டு | தொளையுடைப்பொருள் - வீணை - தடி - சேனை - மிதுனராசி - ஓணான் (௬) |
| வண்டென்பசங்குகுற்றம்<br>வளையளிவாளியைம்பேர். | வண்டு | சங்கு - குற்றம் - கைவளை - வண்டு - அம்பு (ரு) |
| 82—௮௨. | | ௧௦. |
| உண்டையேதிரளையாகு<br>முறுபடைவகுப்புமென்ப, | உண்டை | திரண்டவடிவு - படைவகுப்பு (௨) |
| தொண்டையாதொண்டை கொவ்வை<br>தூங்கும்யானைத்துதிக்கை, | தொண்டை | ஆதொண்டைச்செடி - கொவ்வைக்கொடி - யானைத்துதிக்கை (௩) |
| கொண்டையேமயிர்முடிக்கு [ம்<br>மிலந்தையின்கனிக்குங்கூற்று | கொண்டை | மயிர்முடி - இலந்தைப்பழம் (௨) |
| கண்டிகைபதக்கம்வாகு<br>வலயமேகலன்பெய்செப்பு. | கண்டிகை | பதக்கம் - தோளணி - ஆபரணச் செப்பு. (௩) |
| 83—௮௩. | | ௧௧. |
| தண்ணமோர்கட்பறைப்பேர்<br>தரித்திமெழுவுமாகும், | தண்ணம் | ஓர்கட்பறை - பாசாயுதம் (௨) |
| வண்ணமேர்சந்தம்பண்பாம் | வண்ணம் | அழகு - நிறம் - குணம் (௩) |
| மறையிராசியமேவேதம், | மறை | மறைவு - வேதம் (௨) |
| பண்ணென்பபாட்டும்பண்ணும்<br>பரிமாவின்கலணையும்பேர், | பண் | இசைப்பாட்டு - பண் - குதிரைச்சேணம் (௩) |
| மண்ணணுவொப்பனைப்பேர்<br>முழவின்மார்ச்சனையுமாமே. | மண் | அணு - அலங்காரம் - மத்தளத்திற்பூசுமண். (௩) |
| 84—௮௪. | | ௧௨. |
| அணங்குநோயழகுதெய்வ<br>மாசைபெண்கொலைவரு[illegible] | அ[illegible]ங்கு | வியாதி - அழகு - தெய்வம் - ஆசை - பெண் - கொல்லுதல் - பிரயாசம் |
| துணங்கையேவிழாப்பெருங்கூ[illegible]<br>[illegible]திரையா[illegible] | துணங்கை | திருவிழா - பெருங்கூத்து - திருவாதிரை நக்ஷத்திரம் (௩) |

| | | |
|---|---|---|
| குணுங்கர்தோற்கருவிமாக்கள் குயிலுவரிழிஞர்முப்பேர், | குணுங்கர் | தோற்கருவியாளர் - நரம்பிறுகிய கருவிக்குரியோர் - சண்டாளர் (௩) |
| துணங்கறலிருள்விழாவாம் | துணங்கறல் | இருள் - திருவிழா (௨) |
| தோன்றலேசதனுதன்பேர். | தோன்றல் | மகன் - அரசன் (௨) |
| 85—அ௫. | | க௩. |
| புணரியேவாரிநீரிற் பொருதிரைகரைமுப்பேராம், | புணரி | கடல் - அலை - கரை (௩) |
| பணிலமேசலஞ்சலஞ்சங் கிருபெயர்பகரலாமே, | பணிலம் | வலம்புரியாயிரஞ் சூழ்ந்தசங்கு - சங்கு (௨) |
| கணிவேங்கைமரமதாகுங் கழனிசூழ்மருதமும்பேர், | கணி | வேங்கைமரம் - மருதநிலம் (௨) |
| பணியேதோற்கருவிவார்த்தை பாம்புசெய்தொழிலுமாமே. | பணி | தோற்கருவி - சொல் - பாம்பு - தொழில் (௪) |
| 86—அ௬. | | க௪. |
| பாணியூர்நீர்கையோசை பற்றுகான்போதுநாடு, சேணுறுசோலைபண்டஞ் [ம் சிறந்தபல்லியம்பன்னொன்று | பாணி | ஊர் - நீர் - கை - சத்தம் - அன்பு - காடு - காலம் - நாடு - சோலை - பலபண்டம் - வாச்சியப்பொது (௧௧) |
| தாணுவேசயிலஞ்சுற்றி சங்கரனிலைதூணும்பேர், | தாணு | மலை - சுற்றி - சிவன் - நிலைபெறுதல் - தூண் (௫) |
| வேணியேசடைவிசும்பாம் | வேணி | மயிர்ச்சடை - ஆகாயம் (௨) |
| வியாளமேபுலியும்பாம்பும். | வியாளம் | புலி - பாம்பு (௨) |
| 87—அ௭. | | க௫. |
| குண்டலங்குழைவிசும்பாம் | குண்டலம் | குண்டலம் - ஆகாயம் (௨) |
| குபேரனேதனதன்சோமன், | குபேரன் | குபேரன் - சந்திரன் (௨) |
| மண்டிலம்பரியூர்வட்டம் | மண்டிலம் | குதிரை - ஊர் - வட்டம் (௩) |
| மந்தியேயூகம்வண்டு, | மந்தி | பெண்குரங்கு - வண்டு (௨) |
| கொண்டலேமுகில்கீழ்காற்றும் | கொண்டல் | மேகம் - கீழ்காற்று (௨) |
| கோட்டியேவாயில்கூட்டம், | கோட்டி | வாயில் - கூட்டம் (௨) |
| மண்டலிபூனைபாம்பு மண்ணொடுநாயுமாமே. | மண்டலி | பூனை - பாம்பு - பூமி - நாய் (௪) |
| 88—அ௮. | | க௬. |
| புண்டரீகந்திக்கானை புலிவண்டுகழுகுகஞ்சம், | புண்டரீகம் | தென்கிழ்த்திசை யானை - புலி - வண்டு - கழுகு - தாமரை (௫) |
| தண்டமேயானைசெல்லும் வழிதண்டாயுதங்குடைக்கால் | தண்டம் | யானை செல்லும்வழி - தண்டாயுதம் - குடைக்காம்பு (௩) |
| பிண்டிசெம்மாவசோகாம் | பிண்டி | செம்மா - அசோகமரம் (௨) |
| பிதாசிவன்பிரமனாரை, | பிதா | சிவன் - பிரமன் - நாரை (௩) |
| கண்டகஞ்சுரிகைமுள்வாள் | கண்டகம் | உடைவாள் - முள் - வாளாயுதம் () |
| களவெண்பகளாச்சோரப்பேர். | களவு | களாச்செடி - திருட்டு (௨) |

| | | |
|---|---|---|
| 89—அ௯. | | க௭. |
| பண்ணவன்முனிவன்றேவன் பகர்குருவருகனுற்பேர், | பண்ணவன் | முனிவன் - தேவன் - குரு - அருகன் (௪) |
| தண்ணடைமருதஞ்சாரூர் நாடெனவிருபேர்சாற்றும், | தண்ணடை | மருதநிலத்தூர் - நாடு (௨) |
| வண்மையேவழங்கல்வாய்மை வளம்புகழ்வலியாமென்ப, | வண்மை | கொடுத்தல் - உண்மை - வளமை - புகழ் - வலிமை (௫) |
| ஒண்மையேமிகுதிநன்மை யொழுங்கறிவழகைம்பேரே. | ஒண்மை | மிகுதி - நன்மை - ஒழுங்கு - அறிவு - அழகு (௫) |
| 90—௯0. | | கஅ. |
| எண்ணெண்பதெள்ளிலக்க மெளிமைசோதிடம்விசாரம், | எண் | எள்-இலக்கம் - எளிமை-சோதிடநூல் - ஆலோசனை (௫) |
| கண்ணிடங்கணுவேய்கண்ணும் | கண் | இடம் - மரக்கணு - மூங்கில்-கண் (௪) |
| காஞ்சிமேகலையோர்பண்ணும், | காஞ்சி | மாதரிடையணியு ளேழுகோவை - ஓர்பண் (௨) |
| விண்முகில்சுவர்க்கம்வானும் | விண் | மேகம்-தேவலோகம்-ஆகாயம் () |
| விபுலம்பார்விரிவுபீடு | விபுலம் | பூமி - அகலம் - பெருமை (௩) |
| பண்ணையேவயனீர்த்தாழ்வு மருதமாத்துயிலும்பாழி. | பண்ணை | கழனி - குளம் - மருதநிலம்-விலங்கின் படுக்கையிடம் (௪) |
| 91—௯க. | | க௯. |
| காண்டமேதிரைகாடம்பு கமண்டலங்கலன்பெய்செப்பு, நீண்டகோன்முடிவுதூசு நீர்படைக்கலமீரைந்தாம், | காண்டம் | திரைச்சீலை - காடு-அம்பு-கமண்டலம் - ஆபரணம்வைக்குஞ் செப்பு - கோல் - முடிவு - வஸ்திரம் - நீர் - ஆயுதம் (க0) |
| பாண்டிலேறூர்திவட்டம் பணைகட்டில்விளக்குத்தாளம் | பாண்டில் | எருது - வாகனம் - வட்டவடிவு - மூங்கில் - கட்டில் - விளக்கு - தாளம் (௭) |
| ஈண்டென்பதிவ்விடத்தோ டிப்படிசடிதியும்பேர். | ஈண்டு | இவ்விடம் - இவ்வண்ணம் - சீக்கிரம் (௩) |
| 92—௯௨. | | ௨0. |
| அண்டசமுதலையோந்தி யரணைபுள்ளுடும்புபல்லி, நண்டுமீனரவளையாமை நாகமிப்பியுமீராறும், | அண்டசம் | முதலை - ஓணான் - அரணை-பறவை உடும்பு - பல்லி - நண்டு-மீன்-நவளை-ஆமை-பாம்பு-இப்பி () |
| சண்டன்கூற்றலிவெய்யோனும் | சண்டன் | இ[illegible]ன்-பேடி-சூரியன் (௩) |
| தாள்கதவுறுதாள்பாதம், | தாள் | தா[illegible]பாள் - பாதம் (௨) |
| சுண்டையேசுண்டைகள்ளாம் | சுண்டை | சுண்டைச்செடி-கள் (௨) |
| சொர்க்கமேசுவர்க்கங்கொங்கை. | சொர்க்கம் | தே[illegible]லோகம்-முலை (௨) |
| 93—௯௩. | | ௨க. |
| பணமென்பதரவின்பையும் பாம்பும்பொற்காசுமுப்பேர், | பணம் | பாம்பின்படம் - பாம்பு - பொற்காசு (௩) |
| மணமென்பவாசங்கூட்டம் வதுவையுமாகுமென்ப, | மணம் | வாசனை - கூட்டம் - கலியாணம் (௩) |
| பணவையேபாணும்பேயும் | பணவை | பாண்-பிசாசம் (௨) |

| | | | |
|---|---|---|---|
| பையுளேசிறுமைநோயாம், | பையுள் | அற்பம் - வியாதி | (உ) |
| நுணவையெண்ணெலுபிண்டி | நுணவை | எண்ணெலு - மா | (உ) |
| நுனியென்பநுனிநுண்மைப் பேர். | நுனி | கூர்மை - நுட்பம் | (உ) |

ணகரவெதுகை முற்றிற்று.

---

## எ - வது. தகரவெதுகை.

| | | | |
|---|---|---|---|
| 94—கச. | | க. | |
